**முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்**

**O.S.No.243/2022**

22.09.2025 இன்று 1969ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி திருமதி.R.பிரமிளா தேவி, Bench Clerk Gr-1 அவர்களால் சாட்சிக்கு பிரமாணம் செய்விக்கப்பட்டது.

பிரதிவாதி சாட்சி 2 ஜெயசந்திரன் த/பெ.சிவசங்கரன்:

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10வது படித்துள்ளேன். நான் வருமானவரி செலுத்துகிறேனா என்றால் இல்லை. நான் கொத்தனார் என்பதற்கு அமைப்புச்சாரா தொழிலாளர் சங்கத்தில் வழங்கப்பட்ட அடையாள அட்டை தாக்கல் செய்துள்ளேனா என்றால் அடையாள அட்டை உள்ளது, ஆனால் இந்த வழக்கில் நான் அடையாள அட்டை தாக்கல் செய்யவில்லை. என்னிடம் அடையாள அட்டை இல்லை என்றும் அதனால் தான் தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. பிரமாண வாக்குமூலம் தயார் செய்ய என் வழக்கறிஞருக்கு விபரங்கள் யார் சொன்னது என்றால் நான் தான் கூறினேன். 24.01.2011 தேதியில் ரூ.7,50,000/-க்கு நான் கிரையம் வாங்கியதாக கூறுவதற்கு அரசுக்கு வருமான வரி கட்டினேனா என்றால் இல்லை, ஆனால் பத்திரம் எழுதுவதற்கு பதிவு கட்டணம் செலுத்திதான் பத்திரம் பதிவு செய்தேன். நான் பிரமாண வாக்குமூலத்தில் தொழிலில் கொத்தனார் மற்றும் விவசாயி என்று கூழுறியுள்ளேன் என்றால் ஆமாம். நான் 24.01.2011 தேதியில் கிரையம் வாங்குவதற்கு முன்பு எந்த ஊரில் எந்த சொத்தில் விவசாயம் செய்தேன் என்றால் வெளிநபரிடம் நிலம் குத்தகைக்கும் போக்கியத்திற்கும் எடுத்து புதுவை மாநிலம் கீழூர் கிராமத்தில் விவசாயம் செய்தேன். குத்தகைக்கும் போக்கியத்திற்கும் நிலம் எடுத்து விவசாயம் செய்தேன் என்று பிரமாண வாக்குமூலத்திலும் எதிருரையிலும் நான் கூறவில்லை என்றால் சரிதான். குத்தகைக்கும் போக்கியத்திற்கும் விவசாயம் செய்ததாக ஆவணமும் நான்

தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் மனைவியின் நகைகளை விற்றேன் என்பதற்கு விற்பனை ரசீது இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கு என் பெயரில் பட்டா வழங்கப்பட்டதாக கூறியுள்ளேன் என்றால் ஆமாம். என் பெயரில் வழங்கப்பட்டதாக கூறும் பட்டாவை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளது போல தாவா சொத்திற்கான அ பதிவேடு மற்றும் அடமானம் வைத்ததற்கான பத்திரமும் அதனை பைசல் செய்ததற்கான பத்திரமும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். என் பூர்வீக ஊர் புதுவை மாநிலம் கீழூர் என்றால் ஆமாம். வழக்கு சொத்து தமிழ்நாடு, விழுப்புரம் மாவட்டம் கொங்கப்பட்டு கிராமத்தில் உள்ளது என்றால் ஆமாம். கீழூருக்கும் கொங்கப்பட்டு கிராமத்திற்கும் இடையே துாரம் 20 கிமீ இருக்கும் என்றால் 25 கிமீ துாரம். கொங்கப்பட்டு கிராமத்தில் எனக்கு பூர்வீகமாக வேறு நிலம் அல்லது வீடு இல்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி சிவசங்கரன் என் அப்பா என்றால் ஆமாம். வாதி கஸ்துாரியும் 2ம் பிரதிவாதி கனகவள்ளியும் என் சகோதரிகள் என்றால் ஆமாம். என் தந்தை, என் சகோதரிகள் மற்றும் நான் அடங்கிய பொதுகுடும்பத்தில் இதுவரை பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்றால் சரிதான். என் தந்தையுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் 4 சகோதரர்கள் மற்றும் 4 சகோதரிகள். என் தந்தை சிவசங்கரனின் அப்பா பெயர் ஆனந்தபடையாட்சி என்றால் சரிதான். ஆனந்தபடையாட்சியை நான் பார்த்திருக்கிறேனா என்றால் பார்த்திருக்கிறேன். அவருடைய அண்ணனை நான் பார்த்திருக்கிறேனா என்றால் பார்த்ததில்லை. வாதி வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன்.

13.09.2010 தேதியில் கீழூர் கிராமத்தில் உள்ள வேறு ஒரு சொத்து குறித்து என் தந்தை சிவசங்கரன் ஒரு பழனி என்பவருக்கு பொது அதிகார பத்திரம்

எழுதி கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, என் அப்பாவிற்கு தான் தெரியும். என் பிரமாண வாக்குமூலத்தில் மேற்படி பொதுஅதிகார பத்திரம் பற்றி கூறியுள்ளேன் என்றால் இந்த வழக்கு நடப்பதால் கூறியுள்ளேன். 13.09.2010 தேதியிலிருந்து சுமார் 4 மாதங்களுக்குள் 24.01.2011 தேதியில் என் பெயரில் தாவா சொத்துக்கள் கிரையம் பெறப்பட்டுள்ளது என்றால் ஆமாம். கீழூரில் இருந்த பொதுகுடும்ப சொத்துக்களை விற்பனை செய்து தான் தாவா சொத்து என் பெயரில் கிரையம் வாங்கப்பட்டது என்றால் அது சரியல்ல, கீழூரில் பொது குடும்ப சொத்து எதுவும் இருந்ததில்லை. 24.01.2011 தேதியில் நான் சொத்து வாங்கிய கிரையபத்திரத்தில் என் அப்பா சிவசங்கரன் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்றால் அது சரியாக எனக்கு ஞாபகம் இல்லை. என் தாத்தா ஆனந்தபடையாட்சியின் சகோதரர் பெயர் சாமிகண்ணு படையாட்சி என்றால் அவர் யார் என்றே எனக்கு தெரியாது. சாமிகண்ணு திருமணம் செய்துகொள்ளாமல் குழந்தைகள் யாரும் இல்லாமல் என் தாத்தா ஆனந்தபடையாட்சியை வாரிசாக விட்டுவிட்டு இறந்துவிட்டார் என்றால் அவர் யார் என்றே எனக்கு தெரியாது. மேற்படி சாமிகண்ணு 16.10.1942 தேதியில் சொத்து கிரையம்பெற்றிருந்தார் என்றும் அந்த சொத்துக்கள் ஆனந்தபடையாட்சி அடைந்து அனுபவித்தார் என்றும் அந்த சொத்து தான் பொதுகுடும்ப சொத்து என்றும் அதில் இருந்து கிடைத்த வருமானத்தை கொண்டு ஆனந்தபடையாட்சி பிற சொத்துக்களை கிரையம் வாங்கினார் என்றும் சொன்னால் சரியல்ல. அப்படி கிடைத்த சொத்துக்களை தான் ஆனந்தபடையாட்சி அவருடைய 4 மகன்களுக்கும் 4 மகள்களுக்கும் செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் எழுதி வைத்தார் என்றும் ஆகவே செட்டில்மெண்ட் கண்ட சொத்துக்கள் பொதுகுடும்ப சொத்துக்கள் என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி 8 செட்டில்மெண்ட் பத்திரங்களிலும் சொத்துக்களின் மூலஆதார பத்திரமாக 16.10.1942 தேதியிட்ட கிரையபத்திரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் தாயார் பெயர் தனலட்சுமி. என்

தாயார் எந்த ஆண்டு இறந்தார் என்றால் 2020ம் ஆண்டு இறந்தார். என் தாயார் இறக்கும் வரை எனக்கும், வாதி மற்றும் மற்ற பிரதிவாதிகளுக்கும் இடையில் சண்டைசச்சரவு இல்லை என்றால் சரியல்ல, எனக்கும் வாதி கஸ்துாரிக்கும் இடையில் வாதிக்கு திருமணம் ஆனதிலிருந்தே சண்டை இருந்தது. வாதிக்கு திருமணம் ஆனதிலிருந்தே எனக்கும் அவருக்கும் சண்டைசச்சரவு இருந்ததாக பிரமாண வாக்குமூலத்தில் நான் கூறவில்லை என்றால் சரிதான், இப்போது தான் கூறுகிறேன். என் தாயார் இறந்தபிறகு வாதி கீழுரில் இருந்த பொதுகுடும்ப வீட்டை பொறுத்தும் பொதுகுடும்ப சொத்துக்களை விற்று கிரையம்பெற்ற கொங்கம்பட்டு கிராமத்தில் உள்ள தாவா சொத்து பொறுத்தும் பாகம் கேட்டதால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, ஆரம்பத்திலிருந்தே எனக்கும் வாதிக்கும் சண்டைசச்சரவு உள்ளது. பூர்வீக ஊரில் சொத்து கிரையம் வாங்கினால் விபரம் வாதிக்கும் தெரிந்துவிடும் என்பதால் 25 கிமீ தள்ளி உள்ள கொங்கம்பட்டு கிராமத்தில் சொத்து கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வாதிக்கு 1/4 பாகம் உரிமை உள்ளது என்றால் சரியல்ல. என் தந்தைக்கு ஆண்வாரிசு நான் மட்டும் தான் என்றால் ஆமாம். அதனால் நானும் 1ம் பிரதிவாதியும் சேர்ந்து வாதியை ஏமாற்றுவதற்கு மோசடியாக பல ஆவணங்கள் தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. கீழுரில் உள்ள சொத்துக்களை பொதுஅதிகாரம் பெற்ற முகவர் பழனி விற்றதற்கான விபரம் அடங்கிய வில்லங்க சான்று வாதி இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளதை படித்து பார்த்தேனா என்றால் அதை படித்து பார்க்கவில்லை. பழனி கிரையம் செய்துகொடுத்ததன் மூலம் கிடைத்த தொகை ரூ.7,50,000/- தான் தாவா சொத்து கிரையம் வாங்குவதற்கு பயன்படுத்தப்பட்டது என்பது மேற்படி வில்லங்க சான்றிதழை படித்து பார்த்தாலே தெரியும் என்றால் சரியல்ல, தாவா சொத்து என் தனிப்பட்ட சொத்து. வாதிக்கும் பாகம் கொடுக்ககூடாது என்ற எண்ணத்தில் நானும் 1ம்

பிரதிவாதியும் சேர்ந்துகொண்டு பொய்யாக எதிர்வாதம் செய்கிறோம் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை.

Sd/- A.Manimozhi
Principal Sessions Judge,
Villupuram.